# மாறாமலை முகட்டில்

# மழலை மொழிகள்



**‘மாறா’மலை**

பூத்துக் குலுங்கும் மலர்கள்
துள்ளிக் குதிக்கும் குரங்குகள்
பிளிரும் யானைகள்
ஆடும் மயில்கள்
பாடும் குயில்கள்
ஓயாமல் கொட்டும் அருவிகள்
எழில் கொஞ்சும் அழகு
என்றும் மனதில்
‘மாறா’மலை

**Anu Krishna**

**வெற்றி**

தண்ணீரின் ஆழத்தைப் பொறுந்தே
தாமரையின் தண்டு நீளும்
இலட்சியத்தைப் பொறுத்தே
வெற்றியும் அமையும்.

**S. Dharshini**

**இயற்கை**

மாறா மலையைக் கண்டோம்
மகிழ்ச்சி தந்தது
மழலையரின் உள்ளம் மகிழ்ந்தது
இதுவன்றோ இயற்கை.

**கெ.பிரபாகரன்**

**வாழ்க**

வாழ்க வளமுடனே
மாறாமலையே வாழ்க!
என்றும் மாறாத மலையே வாழ்க!
அழகிய சூழல் மாறாமலையே வாழ்க!
மரம்,செடி,கொடிநிறைந்தமலையே வாழ்க!
காக்கும் வனவர் அனைவரும் வாழ்க!
நாம் காடுகளை காப்போம்
நலமுடன் வாழ்வோம் !

**S. Aswin Scyilin Jeshua**

**பிரார்த்திக்கிறேன்..**

பல வகை உயிரிகள் உலகத்தில்
அவற்றில் பல காடுகளில் ……….
காடுகளைக் காணப்பலரும் ஆசைப்படுவர்
வாய்ப்புகள் கிடைப்பதோ சிலருக்கு
அச்சிலருள் நாங்கள்
கண்டுக் கொண்டிருப்பது மாறாமலை.
இதன் அழகு ஆண்டாண்டுகளாகளாய்
மாறாமல் இருக்கிறது…..
இன்னும் பல ஆண்டுகள்
மாறாமல் இருக்க வேண்டும் ….
அதற்கு
ரப்பர் முதலாம் தோப்புகள் வேண்டாம்
பிராண வாயு அளித்து
பல் உயிர்களை அதனுள்
வாழவைக்கும் மரங்களே தேவை….
மரங்கள்
இக்காடுகளிலும்
நமது வீடுகளிலும் நட்டு
சந்ததியாய்
மகிழ்ந்து வாழ
பிரார்த்திக்கிறேன்..

**ச.ஹேம்நிஷா**

**விஞ்ஞானிகள்**

மனிதனை அரவணைக்கும்
இயற்கை அன்னைக்கு
மனிதனால் விளைவுகள்….
விளைவுகள் தடுக்க
உயர்ந்த கனவுகள் …..
கனவுகளை நிஜமாக்கி
உழைக்கும் உள்ளங்கள்தான்
வானுயர்ந்த
விஞ்ஞானிகள்!

**R.P. Ajeesh**

அழகு
வானுயர்ந்த மரங்கள்
பூத்து குலுங்கும் பூக்கள்
விளையாடும் பறவைகள்
ஓடும் விலங்குகள்
கொட்டும் அருவிகள்
இயற்கையின் அழகே அழகு.

**K.Sujitha**

## என் இனிய காடே!

உன் அழகை நான் எப்படி பாராட்டுவேன்
உள்ளத்தை நீ கவர்ந்து விட்டாய்
உன் செழிப்பு
என் உள்ளத்தை மகிழ்விக்கிறது
உன்னுடன் வாழும்
இந்த நாட்கள் என்னை
மகிழ்விக்கிறதே
என் இனிய காடே!

**S.Akalya**

## உனக்கோர் இடம்

மலைவளம் நிறைந்த மாறாமலையே
உன்னைப் படைத்தவன்
மேல் பழியுமில்லை
எடுத்தவர்கள்தான்
அனுபவித்து கொண்டார்கள்.
உன் அழகிய தோற்றத்தினால் ஏன்
என் மனதில் இருந்து மாறாமலையே
இருக்கின்றாய்
உன் அழகினை நினைக்கையிலே
என் மனதில்
ஏனோ உனக்கு ஒரு தனி இடம்.

**ஜே.எஸ்.ஆர்லின் சோபியா**

## இயற்கையின் வரங்கள்

அழகை ரசி – அடைய நினைக்காதே
இயற்கையை ரசி – அழிக்க
நினைக்காதே
இரவினில் நட்சத்திரங்கள் ஒளிர்கின்றன
பகலில் ஒளிர்வதில்லை.
இயற்கை நீயோ
பகலிலும் இரவிலும் தெரிகின்றாய்..
மழையைத் தருகின்றாய்
மனதைக் கவருகின்றாய்
மண்ணரிப்பைத் தடுக்கின்றாய்
மண்ணுலகைப் பாதுகாக்கின்றாய்….

Michelin enifa

## இயற்கையை காப்போம்

மரங்களை காத்திடுவோம்
விலங்குகள் கூட்டத்தினை
கனிவாய் போற்றிடுவோம்..
இயற்கைவழிகளிலே
இயங்கி வந்தால் நன்மைவரும்.
செயற்கை வழியில் செயல்பட்டால்
அழிவு தான் மிஞ்சிடும்

K.V.Nishmitha

## கண்ணீர்

சிலர் உன்னை அழிக்கும்போது
கண்ணீர் மட்டுமே வடிக்கிறேன்.
மரமே என்னை மன்னித்து விடு

R.Deepika

## இணைந்து காப்போம்

காண வந்தோம் மலைவளம்
அதுவே நமது ஓரே பலம் அவற்றை
நீயும் பார்த்திடு;
பார்த்து நீயும் காத்திடு
மரங்கள் நம் கால்கள்.
காப்போம் நாமும் மரங்களை
இணைப்போம் நாமும் கரங்களை
மரங்களைக் காக்க இணைவோம்
இணைந்து நாம் உழைப்போம்.
மரங்களை மட்டுமல்ல அதன் மூலம்
நம்மையும் காக்க.

**ஆர். ஜினோபிளஸ்ஸில்**

## மாறாமலை

மாறாத வளங்கள்
மாறாத அருவி
மாறாத அழகு
அதுதான் மாறாமலை

S.K. Subashini

## மாரி

மாரியில்லையேல்
காரியமில்லை
மாரிதரும்
மாமலைகள் அழிப்பதேன் .

M.L. Minimol

## அழிப்பதேன்

வானளவு உயர்ந்த மலையிருந்தால்
நமக்கேன் கவலை
நாட்டுக்கும்வீட்டுக்கும்
வளம்தரும் காடுகள்
அதை அழிப்பதேன்.

ஆர்.சி.சார்லிங்சௌமியா

## இயற்கை

விதவித மரங்கள்
அவற்றைஅழிக்கின்றமனிதர்கள்
இயற்கையாகிய என் தந்தையே!
உன்னை காப்பாற்ற நான் முயல்வேன்.
மரம் செடி கொடிகள் நடுவோம்
அவற்றிலிருந்து பயன் பெறுவோம்.
உலகில் நோய் நொடியின்றி வாழ
இயற்கையாகிய தந்தையே;
உன்னைப் பேணுவோம்

S. Anju

**ஆழகிய மலைவளம்**
கொண்ட மாறா மலையே நீ
என் மனதலில் மாறா இடம்
பெற்று விட்டாய்.
மரங்கள் மக்களுக்கு
உதவிகள் அளிக்கின்றன
மக்களோ மரங்களை அழிக்கின்றனர். நீ
அதைப் பொறுத்துக்கொண்டு
வளமுடன் வாழ்வாய்

K.P.Athmiya

**இயற்கை வளம் காப்பேன்**
நாட்டு வளம் வளர
காட்டு வளம் தேவை!
காட்டு வளம் வளர
மக்கள் ஒத்துழைப்புத் தேவை!.
மக்கள் உலகில் வாழ
பிராணவாயு முக்கியத்தேவை!
பிராணவாயு உருவாக
காடே ! நீ எங்களுக்குத் தேவை!
காடே ! நீ வருந்தாதே
உன்னை பேணிக் காப்பேன்.

R. Levine Sheknah

**இயற்கையே**
நீ நீரோடையாய் இருக்கும் போது
கேட்டேன் சலங்கைச் சத்தத்தை!
நீ மலைத்தொடராய் நிற்கும் போது
கண்டேன் கருணையை !
நீ பச்சைக்கொடையாய் இருந்த போது
உணர்ந்தேன் பசுமையை!
வேண்டும் எனக்கு இன்னும் பல
கண்களும், கைகளும், காதுகளும்,
உன் அழகை ரசிக்க!

N.C.Priyanka

**தாயினும்**
தாயானவள் உயிர் அளிக்கிறாள்
நீயோ எனக்கு சுவாசிக்க
உயிர் வாயுவைத் தருகிறாய்
நீ தாயினும் மேலானவள்.

R.P. Shyni

**காடு-நாடு.**

இயற்கையென்பது வரம்
அதைப் பாதுகாத்தால் நலம்
உயிர் வாழ காற்று நீர் தந்திடும் காடு,
அதை நாடு.

A.Prasanth

**படைப்பு**
அழகிய காடு வண்ணமிகு பூக்கள்
எண்ணற்ற விலங்கள்
ஒசை எழுப்பும் வண்டுகள்
எண்ணத்தூண்டும் மரங்கள்
பார்க்க பார்க்க பரவசம்
காடு இருந்தால் நாடு செழிக்கும்
இயற்கை அன்னையின்
படைப்பே படைப்பே.

V.T. Shivani

**வளமை**
குமரியின் வளமை
இயற்கையின் பசுமை
காப்போம் என்றும்
வளமை பெறுவோம்.

W. Shiny and J.Jenisha

**சேமிப்பு**
சேமிக்க வேண்டும் பணம்!
சேமிக்க வேண்டும்!
சிக்கனமாய்ச் செலவு செய்து
சேமிக்க வேண்டும்!
தேவைக்காக மின்சாரத்தைப்
பயன்படுத்த வேண்டும்.
எரி சக்தி வீணாவதைத் தடுக்கவேண்டும்
நம் எதிர்காலத் தலைமுறையின்
அச்சம் போக்குவோம்.

A.J. Jerolin

**காடுகளே**
வளமிக்க காட்டுவளமே
செழித்து நிற்கும் மரங்களே!
ஏன் கண் கலங்குகின்றாய்
மக்கள் அழிப்பதைப்பார்த்தா?
வேண்டாம் கலக்கம் !
காப்போம் நாங்கள் !

Y.Sushma Karen

**ஆழகு மாறாமலை**
ஆழகிய மாறமமலையே
உன் அழகுக்கு ஈடேயில்லை
உன் இருதயத்தில் பறவைகளையும்
விலங்குகளையும் மரங்களையும்
வைத்திருக்கிறாய் .
ஆனால் மக்களின் செயல்களால்
அழிந்து வருகிறாய்
அழிவிலிருந்து உன்னைக்காப்போம்
நாங்கள்.

M.Monisha

**வளங்கள்**

கடல் வளம் நீர் வளம்.
நில வளம் மர வளம்.
மழையின் வளம் மலை வளம்
ஆகிய வளங்கள் அனைத்தும்
மக்களின் வளம்.

N.Mohamad ijaz

**வர்ணிக்ககூடுமோ**

உன் வளம் பெருக்கினால்
எங்கள் வாழ்வு செழிக்கும்
எழில் மாறாமலையே
உன் அழகை வர்ணிக்க முடியுமா?

D.J. Ashlin hemi

**இயற்கை**

இயற்கையை நேசி
நோய் நம்மை நெருங்காது வாழலாம்
இயற்கை இறைவன்
தந்த பரிசு
என்றும் பேணிக்காப்போம்!

M.S.Arul Divya Mary

**இயற்கை**

இயற்கையின் வளம்!
வருணிக்க முடியாத வளம் !
இங்கு வாழ்வதே சுகம் !
காற்றின் இசையை உணரமுடியும்
இதைப்போல் கிடைக்குமா
இனிதானதொரு சுகம் !
மழையால் மண்ணின் வாசம்
மரங்களை வெட்டுவதால்
அழிவுதான நிஜம்.
சுகமாக வாழ்ந்திட வேண்டின்.
இயற்கையை நேசிக்க வேண்டும்

D.L.Thatcher Das

**இயற்கை**

தமிழ் மண்ணே!மண்ணே !
வருந்துகிறாயா?
மன்னிக்கவும்!மனிதகுலத்தில் பிறந்ததற்கு
மிகவும் வருந்துகிறேன.
தீயச் செயல்களைக் கொண்ட மனிதன்
தன்செயலால்இயற்கையைஅழிக்கின்றான்.
கொடுமை! கொடுமை! கொடுமை!
நம் சொகுசு வாழ்விற்காக இயற்கையை
அழிப்பது தவறு !தவறு! தவறு!
ஆனால் இதை எல்லாம் தடுக்க
பிறந்தவர்கள் இளம் விஞ்ஞானிகள்
இக் கொடுமையைப் போக்கி வளமான
நாட்டை உருவாக்குவோம்.

S.K.Anjana

**இயற்கைப் பேரரசி**

குறிஞ்சி நிலத்தின் அழகைக் கண்டு
நன்றாய் ரசித்தோமே !
ஊற்றைக் கண்டு உறங்கியிருந்தவர்
யாவரும் தெளிந்தனரே!
இயற்கைச் செழிப்பைக் காணக்காண
மகிழ்ச்சி பொங்கியதே!
பவளப்பாறை மகத்துவத்தை அறிந்து
கொண்டோமே !
வாரணம் வாழும் பூமி என்று தெரிந்து
கொண்டோமே!
காடு இருப்பது ஐந்தடுக்கில் அதை
கற்று கொடோமே !
முல்லை வளத்தை அறிந்து அறிவைப்
பெருக்கிக் கொண்டோமே !
முத்துக்குழி வயல்களின் முத்து
தகவல்கள் !
மலைகடந்து வந்தவர்க்கு கிடைத்த
அனுபவங்கள் !
நூறாண்டு காலம் கடந்தாலுமே இதன்
நினைவுகள் எங்கள் நெஞ்சினிலே!

**ஷ.ஹே. ரேஸ்மாரதி**

14,15-2-2009 ஆகிய தேதிகளில்
குமரி அறிவியல் பேரவை இளம்
விஞ்ஞானிகள் உயிரிப் பல்வகைமை
ஆய்வுக்காக மாறாமலை சென்றபோது
மலைமுகட்டில் தோன்றிய கவிதைகள்